# Sample Question paper (Tamil)

மாதிரி வினாத்தாள் - தமிழ்

ஒன்பதாம் வகுப்பு (Class - IX)

அக்டோபர் 2011 - மார்ச் 2012

II - TERM (OCT 2011 - MARCH 2012)

Max. Marks : 90 — Time Allowed : 3 Hours

மொ.மதிப்பெண் கள்: 90 — கால அளவு : 3 மணி

The question paper is diveded in to four sections:

இக் கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | |
|---|---|---|
| **SECTION : A** | Reading comprehension | - 15 Marks |
| பிரிவு: அ | படித்தல் (உரைநடைப் பகுதி) | -15 மதிப்பெண்கள் |
| **SECTION : B** | **Writing** | - 21 Marks (21) |
| பிரிவு: ஆ | எழுதுதல் | -21 மதிப்பெண்கள் |
| **SECTION : C** | Grammar | - 15 Marks |
| பிரிவு: இ | இலக்கணம் | -15 மதிப்பெண்கள் |
| **SECTION : D** | **Literature / Text Books** | - 39 Marks (39) |
| பிரிவு: ஈ | இலக்கியம்/தமிழ்ப் பாடநூல் | -39 மதிப்பெண்கள் |

---

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.

★ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## பிரிவு - அ

### படித்தல் - 15 மதிப்பெண்

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக.** **(5)**

சைவ சமயத்தைப் புத்துயிர் பெறச் செய்யப் பலர் முயன்றனர். அவர்களில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் மிகவும் குறிப்பிடத் தக்கவர்கள்.

மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்கின்ற வகையில் மன்னன் பின்பற்றிய மதத்தைப் பின்பற்றும் மரபை மக்கள் கொண்டிருந்தனர். எனவே, நாயன்மார்கள் மன்னர்களைச் சைவ சமயத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்யப் பெரிதும் முயன்றனர். நாயன்மார்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்பு இருந்தது. சிறுத் தொண்டர், அப்பர், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், காரைக்கால் அம்மையார், சுந்தர மூர்த்தி நாயனார் முதலானோர் முக்கியமான நாயன்மார்கள் ஆவர். திருநாவுக்கரசர் அவரது சகோதரி திலகவதி அம்மையாரால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றப்பட்டார். பல்லவன் முதலாம் மகேந்திரவர்மனைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார் திருநாவுக்கரசர். தமது மூன்று வயதில் பார்வதியிடம் ஞானப்பால் பெற்றாராம் திருஞான சம்பந்தர். இவர் கூன் பாண்டியன் எனும் மன்னனின் தீராத வயிற்று வலியை தீர்த்து அவரைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார். கடவுளுக்காகத் தம் கண்ணைப் பிடுங்கி அப்பிய கண்ணப்ப நாயனாரின் கதையும் உள்ளது. கடவுளுக்காக எவ்வித இன்னல்களையும் பொறுத்துக் கொண்டு தியாகத்தை செய்ய மனிதன் தயாராக இருக்க வேண்டும் எனும் கருத்தை உணர்த்தும் வகையில் இக் கதைகள் அமைந்துள்ளன.

**வினாக்கள்:**

1. நாயன்மார்கள் வளர்த்த சமயம்
   - அ). சைவம்
   - ஆ). வைணவம்
   - இ). சமணம்
   - ஈ). பௌத்தம்

2. திலகவதி அம்மையாரால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றப்பட்டவர்
   - அ). திருஞான சம்பந்தர்
   - ஆ). திருநாவுக்கரசர்
   - இ). சுந்தரர்
   - ஈ). சிறுத்தொண்டர்

3. கூன் பாண்டியனின் தீராத வயிற்று நோயைத் தீர்த்து வைத்தவர்
   - அ). அப்பர்
   - ஆ). திருஞான சம்பந்தர்
   - இ). சுந்தரர்
   - ஈ). காரைக்கால் அம்மையார்

4. கடவுளுக்காகத் தம் கண்ணை வழங்கியவர்

அ). சிறுத்தொண்டர்

ஆ). அப்பர்

இ). கண்ணப்பர்

ஈ). சுந்தரர்

5. இன்னல் எனும் சொல்லின் பொருள்

அ). இன்பம்

ஆ). தியாகம்

இ). துன்பம்

ஈ). வேகம்

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

நாம் பிறரை எவ்விதப் பேதமுமின்றி அன்புடன் பாவித்து மதிக்க வேண்டும். அன்பற்று மற்றவரை நோக்கும் போது பேதம் தோன்றும். சுவாமி இராமதீர்த்தர் இவ்வுண்மையை ஒரு கதை வடிவில் விளக்குகின்றார். ஒரு கண்ணாடி மாளிகைக்குள் நாய் ஒன்று நுழைந்தது. அதற்குள் நுழைந்ததும் பதிக்கப்பட்ட கண்ணாடிகளில் எல்லாம் நாயின் பிம்பங்களே தெரிந்தன. நாய் அவற்றைத் தனக்குப் பகையான நாய்கள் என்றெண்ணி முறைத்தது. நாய் பிம்பங்கள் எல்லாம் அதனைப் பார்த்து முறைத்தன. தன்னைப் பகைநாய்கள் பல சூழ்ந்து கொண்டுவிட்டன என எண்ணிய நாய் அப்பிம்பங்களைக் கண்டு குரைத்தது. உடனே அதன் எதிரொலி கேட்டுப் பல நாய்கள் தன்னை எதிர்ப்பதாகப் புரிந்து கொண்ட நாய் மேலும் வலுவுள்ள மட்டும் குரைத்தது. குரைத்து குரைத்து இறுதியில் உயிரையே விட்டுவிட நேர்ந்தது. நாய் பிம்பங்களைக் கண்டு அவை தன் இனத்தைச் சார்ந்த நாய்கள் அல்ல; தன் தோற்றங்களே என்று கண்டு கொள்ள முடிந்திருந்தால் நலமாயிருந்திருக்கும். அவ்வாறு இல்லாததால் துயர முடிவு ஏற்பட்து. மனிதர் மற்றவரைப் பார்க்கும் பார்வைக்கு ஏற்றதாகவே எல்லாம் தெரியும் என்பதும் வேறுபாட்டுணர்வோடு காணும் போது எல்லாம் தம்மிலிருந்து வேறுபட்டனவாய்த் தெரியும் என்பதும் இக்கதையால் அறியப்படும் உண்மைகளாகும்.

**வினாக்கள்:**

1. நம் மனதில் எப்போது பேதம் தோன்றும்?

அ). பிறரிடம் அன்பு காட்டும் போது

ஆ). பிறரை நேசிக்கும் போது

இ). பிறர் நம்மை வெறுக்கும் போது

ஈ). அன்பற்று பிறரை நோக்கும் போது

2. நாய் உயிரை விடக் காரணம்

அ). பல நாய்கள் தாக்கியது

ஆ). கண்ணாடி மாளிகைக்குள் நுழைந்தது

இ). தன் பிம்பத்தைக் கண்டு தன் இன நாய்கள் தாக்க வந்ததாக எண்ணியது

ஈ). நோயுற்றமை

3. பேதம் என்ற சொல்லின் பொருள்

அ). வேதம்

ஆ). உண்மை

இ). ஒற்றுமை

ஈ). வேறுபாடு

4. இக் கதையைக் கூறியவர்

அ). இராமர்

ஆ). இராவணன்

இ). இலட்சுமணன்

ஈ). இராம தீர்த்தர்

5. பலமுள்ள என்பதன் நேர்ப்பொருள் தரும் சொல்

அ). தம்மில்

ஆ). எதிரொலி

இ). வலுவள்ள

ஈ). நலமாய்

**3. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

நடிப்பு என்பது கவின் கலைகளுள் ஒன்றாகும். சங்க காலத்தில் நாடகம் மிகவும் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தது. திராவிட நாகரிகத்தின் ஒரு முக்கிய அம்சமாக கருதப்படக்கூடிய நாட்டிய நாடகம் சங்க காலத்தில்

சிறப்புற்றுத் திகழ்ந்தது. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் சங்க காலத்தில் நாட்டிய நாடகம் பெற்றிருந்த சிறப்பினை விளக்குகிறார். ஒரு நடிகனுக்குத் தேவையான ஒன்பது வகையான பாவங்களைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. வீரம், பயம், வெட்கம், வியப்பு, மகிழ்ச்சி, துக்கம், சாந்தம், அருவெறுப்பு, கோபம் ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்தும் முகபாவங்கள் ஒரு நடிகனுக்கு இருக்க வேண்டுமென அந் நூல் குறிப்பிடுகின்றது. நடிப்பில் இருபத்து நான்கு வகைகள் இருப்பதாகவும் அக் குறிப்புக் கூறுகின்றது.

**வினாக்கள்:**

1. திராவிட நாகரிகத்தின் முக்கிய அம்சமாக விளங்கியது
   அ). நாட்டியம்
   ஆ). நாடகம்
   இ). நாட்டிய நாடகம்
   ஈ). திரைப்படம்

2. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர்
   அ). அடியார்க்கு நல்லார்
   ஆ). இளங்கோவடிகள்
   இ). சீத்தலைச் சாத்தனார்
   ஈ). மறைமலையடிகள்

3. நடிகனுக்குத் தேவையானப் பாவங்களைப் பற்றிக் கூறும் நூல்
   அ). மணிமேகலை
   ஆ). சிலப்பதிபகாரம்
   இ). சிந்தாமணி
   ஈ). வளையாபதி

4. நடிப்பில் உள்ள வகைகள்
   அ). 28
   ஆ). 12
   இ). 9
   ஈ). 24

5. கவின் என்ற சொல்லின் பொருள்

அ). சிறப்பு

ஆ). முக்கியம்

இ). அழகு

ஈ). கவிஞன்

## பகுதி - ஆ

1. நீ வாழும் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலையால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பைச் சுட்டிக் காட்டிமாசு கட்டுப்பாட்டுத் துறை அதிகாரிக்குக் கடிதம் ஒன்று எழுதுக (8)

(அல்லது)

நீ கண்டு களித்த சுற்றுலா இடங்கள் பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

★ [உமது முகவரி: கவிதா/கவின், 28. காந்தி நகர், சென்னை - 18 எனக் கொள்க.]

2. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (8)

அ). முன்னுரை - யாவர்க்கும் கல்வி - கிராமங்களிலும் கற்றல் ஆர்வம் - வாழ்வுக்கு உதவும் வகையில் கல்வியில் மாற்றம் - தன் காலில் நிற்கும் ஆற்றல் வளர்ந்திடக் கல்வி உதவுதல் - ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிவகை செய்தல் - முடிவுரை.

ஆ). இந்திய நதிகள் - பாயும் நிலப் பகுதிகள் - பல்வேறு பருவ காலங்கள் - வெள்ளப் பெருக்கால் மழை நீர் கடலில் வீணாகக் கலத்தல் -நீர்த் தட்டுப்பாடு - பயனுள்ள வகையில் நீர் ஆதாரத்தைச் சீர்படுத்தல் - ந்திகளை இணைத்தல்- முடிவுரை.

இ). முன்னுரை - நிலையற்ற செல்வம் - சேமிப்பின் அவசியம் - பல்வகைச் சேமிப்புத் திட்டங்கள் - மாணவர் சேமிப்புத் திட்டம் - முடிவுரை.

3. உமது பகுதியில் நடைபெற்ற இலவச உடல் பரிசோதனை முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக. (5)

(அல்லது)

உமது பள்ளியில் நடைபெற்ற 'கைவினைப் பொருள் கண்காட்சி' குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.

## பகுதி - இ

**1. சான்று தருக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3)**

i). கெடுதல் விகாரம்

அ). கற்கோட்டை

ஆ). மரவேல்

இ). வாழைப்பழம்

ஈ). பொன் வளையல்

ii). மூவசைச் சீர்

அ). கண்ணன்

ஆ).நீர்

இ). மணிமேகலை

ஈ). வேதனை

iii). முற்று மோனை

அ). இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

ஆ). விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின்று உடற்றும் பசி.

இ). கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

ஈ). தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

iv). வேற்றுமையணி

அ). அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஆ). பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப் பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

இ). தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

ஈ). அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

v). நேரொன்றாசிரியத் தளை

அ). அகர முதல

ஆ). நிலவரை நீள்புகழ்

இ). பாரி பாரி

ஈ). யாதானும் நாடாமல்

**2. நிரப்புக (எவையேனும் மூன்றை மட்டும்) (3)**

i). ஊஞ்சல் கயிறு போல முன் பின்னாகப் பொருள் கொள்வது ----- பொருள்கோள்.

அ). விற்பூட்டுப் பொருள்கோள்

ஆ). அடிமறிமாற்றுப் பொருள்கோள்

இ). தாப்பிசைப் பொருள்கோள்

ஈ). மொழிமாற்றுப் பொருள்கோள்

ii). இரும்பு + ஆணி என்பது ---- எனப் புணரும்.

அ). இரும்பாணி

ஆ). இருப்பாணி

இ). ஈராணி

ஈ). இருப்பணி

iii). எழுத்துத் தனியாகவோ, பல சேர்ந்தோ ஓசைபட பிரிந்து நிற்பது -------- எனப்படும்.

அ). தளை

ஆ). அடி

இ). அசை

ஈ). சீர்

iv).காய் முன் நேர் வரின் ---- ஆகும்.

அ). வெண்சீர் வெண்டளை

ஆ). இயற்சீர் வெண்டளை

இ). கலித்தளை

ஈ). நேரொன்றாசிரியத் தளை

v). சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி நேரே பொருள் கொள்வது

அ). வேற்றுமையணி

ஆ). ஏகதேச உருவக அணி

இ). நிரல் நிரையணி

ஈ). ஏகதேச உருவக அணி

**3. கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்றை மட்டும்) (3)**

i).ஆறு + பாலம்( சேர்த்து எழுதுக)

அ). அறுபாலம்

ஆ). ஆறுபாலம்

இ). ஆற்று பாலம்

ஈ). ஆற்றுப்பாலம்

ii). சான்றாண்மை (அசை பிரித்து வாய்பாடு கூறுக)

அ). புளிமாங்காய்

ஆ).தேமாங்காய்

இ). கருவிளங்காய்

ஈ). கூவிளங்காய்

iii). படும்(ஈரசையாக்குக)

அ). படு

ஆ). படும்

இ). படூஉம்

ஈ). பாடும்

iv). உயர்வு + அடைந்தார் (சேர்த்து எழுதுக)

அ). உயர்வுடைந்தார்

ஆ). உயரடைந்தார்

இ). உயிரடைந்தார்

ஈ). உயர்வடைந்தார்

v). கூவினான் (வாய்பாடு கூறுக)

அ). தேமா

ஆ). புளிமா

இ). கருவிளம்

ஈ). கூவிளம்

4. இலக்கணக் குறிப்பு தருக. (மூன்றுக்கு மட்டும்) (3)

i). செந்தாமரை

அ). கருவிளங்கனி

ஆ). கூவிளங்கனி

இ). தேமாங்கனி

ஈ). புளிமாங்கனி

ii). பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

அ). வேற்றுமையணி

ஆ). நிரல் நிரையணி

இ). ஏகதேச உருவக அணி

ஈ). பிறிது மொழிதல் அணி

iii). இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது?

அ). பொழிப்பு மோனை

ஆ). இணை மோனை

இ). ஒரூஉ மோனை

ஈ). கூழை மோனை

iv). தமிழ்ப் பாடம்

அ). தோன்றல் புணர்ச்சி

ஆ). திரிதல் புணர்ச்சி

இ). கெடுதல் புணர்ச்சி

ஈ). இயல்புப் புணர்ச்சி

v). மாறாக் காதலர் மலைமறந்தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்தோள் வளை நெகிழும்மே
கூறாய் தோழி யான் வாழுமாறே

அ).தாப்பிசைப் பொருள்கோள்
ஆ).அளைமறி பாப்புப் பொருள்கோள்
இ). அடிமறிமாற்றுப் பொருள்கோள்
ஈ). கொண்டு கூட்டுப் பொருள்கோள்

**5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (மூன்று மட்டும்) (3)**

i) அ). நிலைமொழியின் ஈற்றெழுத்துக் குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருந்தால், நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம் தான் ஊர்ந்து வந்த வல்லின மெய்யை விட்டு நீங்கும்.

ஆ). நிலைமொழியின் ஈற்றெழுத்துக் குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருந்தால், நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம் தான் ஊர்ந்து வந்த வல்லின மெய்யை விட்டு நீங்காது.

இ).நிலைமொழியின் ஈற்றெழுத்துக் குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருந்தால், நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம் கெடும்.

ஈ).நிலைமொழியின் ஈற்றெழுத்துக் குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருந்தால், நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம் குற்றியலிகரமாகும்.

ii). அ). வெண்பாவில் இயற்சீரும் வெண்சீரும் மட்டுமே வரும்.
ஆ). வெண்பாவில் காய்ச்சீரும் கனிச்சீரும் மட்டுமே வரும்.
இ). வெண்பாவில் காய்ச்சீரும் வெண்சீரும் மட்டுமே வரும்.
ஈ). வெண்பாவில் இயற்சீரும் கனிச்சீரும் மட்டுமே வரும்.

iii). அ). அடிதோறும் மூன்று சீர்களைப் பெற்று வருவது 'சிந்தடி' எனப்படும்.

ஆ).அடிதோறும் மூன்று சீர்களைப் பெற்று வருவது 'அளவடி' எனப்படும்.

இ).அடிதோறும் மூன்று சீர்களைப் பெற்று வருவது 'நெடிலடி' எனப்படும்.

ஈ).அடிதோறும் மூன்று சீர்களைப் பெற்று வருவது 'குறளடி' எனப்படும்.

iv). அ). ஓர் அடியுள் முதற் சீரிலும் நான்காம் சீரிலும் முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது ஒரூஉ மோனை எனப்படும்.

ஆ). ஓர் அடியுள் முதற் சீரிலும் நான்காம் சீரிலும் முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது முற்று மோனை எனப்படும்.

இ). ஓர் அடியுள் முதற் சீரிலும் நான்காம் சீரிலும் முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது பொழிப்புமோனை எனப்படும்.

ஈ). ஓர் அடியுள் முதற் சீரிலும் நான்காம் சீரிலும் முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது இணை மோனை எனப்படும்.

v). அ).உலகில் இல்லாத பொருள் ஒன்றுக்கு உவமையாக்கிக் கூறுவது உவமையணி எனப்படும்.

ஆ).உலகில் இல்லாத பொருள் ஒன்றுக்கு உவமையாக்கிக் கூறுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

இ).உலகில் இல்லாத பொருள் ஒன்றுக்கு உவமையாக்கிக் கூறுவது இல் பொருள் உவமை அணி எனப்படும்.

ஈ).உலகில் இல்லாத பொருள் ஒன்றுக்கு உவமையாக்கிக் கூறுவது நிரல் நிறை அணி எனப்படும்.

## பிரிவு - ஈ

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

மலையும் கடலும் காடும் கொண்ட உலகம் பிறந்து அளவற்ற காலம் ஆகிவிட்டது. காய்கின்ற கதிரவன் சுழன்ற போது சிதறி வந்த ஒரு பகுதி, உருண்டை வடிவம் பெற்றுத் தானும் சுழன்றது. நெருப்புக் கோளமாக இருந்த அது, காலப் போக்கில் குளிர்ந்தது. நீரும் நிலமும் தோன்றின. உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற உயிர்க் கோளமாக அது மாறுவதற்குச் சுமார் நூற்றைம்பது

கோடி ஆண்டுகளுக்கும் மேலானது. முதன் முதல் நீரில் உயிர்கள் தோன்றின. அவை நாளடைவில் நிலத்திலும் பரவின. பின்னர் அவை படிப்படியாக நிற்பன, ஊர்வன, பறப்பன, நடப்பன, மனிதன் என வளர்ச்சி நிலைகளைப் பெற்றன. காலம் என்னும் குயவன், சுழலும் உலகச் சக்கரத்தில் எண்ணற்ற உயிரினங்களை உருவாக்கினான். அண்டத்தில் நிலவும் சந்திரன், செவ்வாய் முதலான கோள்களில் உயிரினங்கள் வாழியலா. நிலத்தில் மட்டுமே உயிர்கள் வாழ இயலுமாதலால் அதனை உயிர்க்கோளம் என வழங்குகிறோம்.

__வினாக்கள்:__

1. உலகம், உயிர்க் கோளமாக மாறச் சென்ற/ ஆன ஆண்டுகள்
   - அ). சுமார் நூற்று இருபத்தைந்து கோடி ஆண்டுகள்.
   - ஆ).சுமார் இருநூற்று ஐம்பது கோடி ஆண்டுகள்.
   - இ). சுமார் நூற்று ஐம்பது கோடி ஆண்டுகள்
   - ஈ). சுமார் முந்நூற்றைம்பது கோடி ஆண்டுகள்.

2. உயிரினங்கள் வாழ இயலும் கோள்
   - அ).சந்திரன்
   - ஆ). சூரியன்
   - இ). செவ்வாய்
   - ஈ). பூமி

3. கதிரவன் சுழன்ற போது சிதறிய ஒரு பகுதி
   - அ). தட்டை வடிவம் பெற்று உடன் சுழன்றது.
   - ஆ). கோள வடிவம் பெற்றுத் தானும் சுழன்றது.
   - இ). உருண்டை வடிவம் பெற்றுத் தானும் சுழன்றது.
   - ஈ). கோர வடிவம் பெற்றுத் தனியே சுழன்றது.

4. காலம் என்னும் குயவன் உருவாக்கியவை
   - அ). எண்ணற்ற உயிரினங்கள்
   - ஆ). எண்ணற்ற உயிர் - பயிரினங்கள்
   - இ). எண்ணற்ற மண்பாண்டங்கள்
   - ஈ). எண்ணற்ற பொம்மைகள்

5. முதன் முதல் உயிர்கள்
   - அ). நிலத்தில் தோன்றின

ஆ). மலையில் தோன்றின

இ).காட்டில் தோன்றின

ஈ). நீரில் தோன்றின

2. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)

புதுச்சேரியில் வாழ்ந்த முனுசாமி என்ற நெசவாளி தில்லையாடி என்னும் ஊரில் பிறந்த மங்களம் என்ற மங்கையை மணந்தார். திருமணத்திற்குப் பின்னர் நெசவுத் தொழில் செய்து வாழ்ந்து வந்தனர். ஆங்கிலேயர்கள் தம் நாட்டுத் துணிகளை இந்தியாவுக்குக் கொண்டு வந்து விற்பனை செய்ததால் நம் நாட்டில் உற்பத்தி செய்த துணிகளின் விலை குறைந்தது. நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டது. வறுமையின் காரணமாக முனுசாமி தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று மனைவியோடு குடியேறினார். அங்கு 'ஜோகன்ஸ்பர்க்' என்ற நகரத்தில் சிறிய காய்கறிக்கடை நடத்தினார். இந் நிலையில் இவர்களுக்கு 1898 ஆம் ஆண்டு பெண் குழந்தையொன்று பிறந்தது. அக் குழந்தையே வீர மங்கை வள்ளியம்மை ஆவார்.

<u>வினாக்கள்:</u>

1.முனுசாமி செய்து வந்த தொழில்

அ). நெசவுத் தொழில்

ஆ). மண்பாண்டம் செய்தல்

இ). பயிர்த்தொழில்

ஈ). பொம்மை செய்யும் தொழில்

2. வள்ளியம்மையின் தாயார் பெயர்

அ). மங்கம்மா

ஆ). மங்களம்

இ). தில்லையாடி

ஈ). மங்கை

3. நம் நாட்டுத் துணிகளின் விலை குறையக் காரணம்

அ).உற்பத்தியின்மை

ஆ). அதிக உற்பத்தி

இ). வெளிநாட்டுத் துணிகளின் வருகை

ஈ). தரமின்மை

4. தென் ஆப்பிரிக்காவில் முனுசாமி செய்து வந்த வியாபாரம்

அ). காய்கறி

ஆ). துணி

இ). தானியம்

ஈ). இரும்புச் சாமான்

5. தில்லையாடி வள்ளியம்மை பிறந்த ஆண்டு

அ). 1898

ஆ). 1878

இ). 1988

ஈ). 1897

3. கீழ்க்காணும் பாடல் அடிகளைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக. (4)

' உதிர் காலம் இனிமேலே யாருக்கு? - நெஞ்சம்
ஓட்டை அடைந்து - பிறர்
தேட்டை கவர்ந்து பிழைப்பாருக்கு - வரும்
எதிர்காலம் இனிமேலே யாருக்கு? - கையால்
ஏரைப் பிடித்து - நெற்றி
நீரைச் சிந்தி உழைப்பாருக்கு!
சிறைச்சாலை இனிமேலே யாருக்கு? - பொருள்
தேக்கிப் புதைத்துச் - சிறு
பாக்கி பதைத்து வதைப்பாருக்கு! '

**வினாக்கள்:**

1.அழிவு காலம் யாருக்கு?

அ). பிறர் செல்வத்தை விரும்பாதவருக்கு

ஆ). பிறர் செல்வத்தை அழிப்பவருக்கு

இ). பிறர் செல்வத்தை கவர்ந்து பிழைப்பவருக்கு

ஈ).உள்ளத்தில் பேராசை இல்லாதவர்களுக்கு

2. நல்ல எதிர்காலம் யாருக்கு?

அ). உழைப்பவர்களுக்கு

ஆ). சோம்பேறிகளுக்கு

இ). செல்வர்களுக்கு

ஈ). ஏமாற்றுபவர்களுக்கு

3. 'தேட்டை' என்னும் சொல்லின் பொருள்

அ). கேட்டை

ஆ). வேட்டை

இ). செல்வம்

ஈ). வறுமை

4. சிறைச்சாலைக்குச் செல்லப் போவோர்கள் எவர்?

அ). அதிகம் பொருள் சேர்ப்பவர்.

ஆ). அதிகம் பொருள் சேர்த்துப் பதுக்கி வைப்பவர்.

இ).செல்வத்தைப் பதுக்குவதோடு வறியவரை வதைப்பவர்.

ஈ). உலக நன்மைக்கு வளம் பெருக்குபவர்.

**4. விடையளிக்க. (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்) (5)**

அ). உணவு உண்ண வேண்டிய முறையை விளக்குக?

ஆ).காமராசர் நாட்டுக்குச் செய்த வளர்ச்சிப் பணிகளைத் தொகுத்துரைக்க?

இ). தமிழர் திருநாளின் சிறப்புகளை விவரிக்க.

**5. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (5)**

அ). தீவினை என்பது யாது?

ஆ). சான்றாண்மை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**6. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (3)**

அ).ஏறு தழுவுதல் பற்றி எழுதுக.

ஆ). வெப்ப மயமாதல் விளக்குக.

**7. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (8)**

அ). கீரைகள் ஒருவகையில் மூலிகைகளே என்பதை விளக்குக.

ஆ). இராணி மங்கம்மாள் செய்த அறப்பணிகளை விவரிக்க.

**8. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (5)**

அ). முருகனின் பண்புகளை எழுதுக.

ஆ). சண்முகத்தின் குணநலன்களை எழுதுக.

# Sample Question paper ( Tamil )

மாதிரி வினாத்தாள் - தமிழ்
பத்தாம் வகுப்பு (Class - X )
அக்டோபர் 2011 - மார்ச் 2012
II - TERM (OCT 2011 - MAR 2012)

Max. Marks : 80 — Time Allowed : 3 Hours
மொ.மதிப்பெண் கள்: 80 — கால அளவு : 3 மணி

The question paper is diveded in to four sections:
இக் கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| SECTION : A | | Reading comprehension | - 15 Marks |
| பிரிவு: | அ | படித்தல் (உரைநடைப் பகுதி) | -15 மதிப்பெண்கள் |
| SECTION : B | | Writing | - 15 Marks |
| பிரிவு: | ஆ | எழுதுதல் | -15 மதிப்பெண்கள் |
| SECTION : C | | Grammar | - 15 Marks |
| பிரிவு: | இ | இலக்கணம் | -15 மதிப்பெண்கள் |
| SECTION : D | | Literature / Text Books | - 35 Marks |
| பிரிவு: | ஈ | இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | -35 மதிப்பெண்கள் |

---

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.
★ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## பிரிவு - அ

படித்தல் - 15 மதிப்பெண்

1. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)

மனித இனத்திற்கு ஆண்டவன் வழங்கியுள்ள அருட்கொடைகளுள் தலையாயது அறிவு. மனிதனின் செயல்பாடுகள்,

கண்டுபிடிப்புகள் ஆற்றலின் வீச்சுகள் ஆகிய அனைத்துக்கும் ஆதாரமாய் அமைந்து அவனை இயக்கும் உந்து விசையாகப் பயன்படுவது அறிவு ஒன்றே! தொட்டனைத்தூறும் மணற்கேணியைப் போல் கற்க கற்க ஊறிப் பெருகுவது அறிவு. வெள்ளத்தால் அழியாது வெந்தணலால் வேகாது என்று புலவரால் போற்றப்படும் அறிவுச் செல்வம் என்றும் அழிவதே இல்லை. பிற செல்வங்கள் பிறருக்குக் கொடுத்தால் குறைந்து விடும். ஆனால் அறிவாகிய செல்வம் மட்டும் தான் பிறருக்குக் கொடுத்தாலும் குறையாது. ஒருவன் பிறருக்கு அறிவூட்டும் போது அவனது அறிவு மென்மேலும் சிறக்கிறது; தெளிவுபடுகிறது.பிற தானங்களை விடவும் `வித்யா தானம்' சிறந்தது என்று அறிஞர்கள் புகழ்வது இதனால் தான்.

**வினாக்கள்:**

1). ஆண்டவன் வழங்கியுள்ள அருட் கொடைகளுள் சிறந்தது

அ). அறிவு
ஆ). அழகு
இ). பொருள்
ஈ). வலிமை

2). ஒருவனது அறி வு எப்போது தெளிவு படும்

அ). கற்கும் போது
ஆ). கல்லாத போது
இ). பிறருக்கு கற்பிக்கும் போது
ஈ). பிறர் போற்றும் போது

3). தணல் என்ற சொல்லின் பொருள்

அ). தண்ணீர்
ஆ). வெந்நீர்
இ). காற்று
ஈ). நெருப்பு

4). தானங்களுள் சிறந்தது

அ). வித்யா தானம்
ஆ). பொருள் தானம்
இ). கண் தானம்
ஈ). இரத்த தானம்

5). மனிதனை இயக்கும் சக்தியாகப் பயன்படுவது

அ). பணம்

ஆ).அறிவு

இ). இளமை

ஈ). அழகு

2. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)

நம் தமிழ் முன்னோர்கள் போற்றி வளர்த்த கலைகள் பலவாகும். அவற்றை நுண்கலைகள் என்றும் பிற கலைகள் என்றும் கூறுவர். நுண்கலைகள் என்ற பிரிவில் இசை, நாடகம், நடனம், ஓவியம் முதலானவை அடங்கும். முற்காலத்தில் அரண்மனைகள், மாளிகைகள், மண்டபங்கள் முதலிய இடங்களை ஓவியங்கள் அழகு செய்தன. சங்க காலத்திற்குப் பிறகு பல்லவர், சோழர், நாயக்க மன்னர்கள் ஆகியோர் காலத்திலும் ஓவியக் கலை சிறந்திருந்தது. திருப்பரங்குன்றத்து முருகவேள் கோவிலில் ஒரு சித்திரமாடம் இருந்ததாகப் பரிபாடல் கூறும். பல்லவர்கள் அமைத்த கற்கோயில்கள், குடைவரைக் கோயில்கள் முதலிய இடங்களில் அழகிய ஓவியங்களைத் தீட்டினர். அவர்கள் காலத்து ஓவியத்தின் உயர் நிலைக்குச் சான்றுகளை சித்தன்னவாசலில் இன்றும் காணலாம்.

<u>வினாக்கள்:</u>

1. ஓவியம் என்பது

அ). சிற்பம்

ஆ).சித்திரம்

இ). நாடகம்

ஈ). நடனம்

2. திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன்

அ). திருமால்

ஆ). பிரம்மா

இ). முருகன்

ஈ). சிவன்

3. பல்லவர்களின் ஓவியக் கலைக்குச் சான்று பகர்வது

அ). ஓவியக் கூடம்

ஆ).சித்திர மாடம்

இ). சித்தன்ன வாசல் ஓவியங்கள்

ஈ). அஜந்தா எல்லோரா ஓவியங்கள்

4. தீட்டினர் என்ற சொல்லின் பொருள்

அ). திட்டினர்

ஆ). வரைந்தனர்

இ). பொறித்தனர்

ஈ). கூர்மையாக்கினர்

5. குடைவரைக் கோவில் என்பது

அ). மலையின் மேல் கட்டப்பட்ட கோவில்

ஆ). மலை அடிவாரத்தில் கட்டப்பட்ட கோவில்

இ). மலையின் அருகே கட்டப்பட்ட கோவில்

ஈ). மலையைக் குடைந்து கட்டப்பட்ட கோவில்

3. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)

பாண்டியர்கள் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே வாழ்ந்து வந்த தமிழ்ப் பழங்குடி மன்னர்கள் என்று திருக்குறள் உரையாசிரியர் பரிமேழலழகர் கூறியுள்ளார். ஆதி இதிகாசங்களான வட மொழி இராமாயணத்திலும் பாரதத்திலும் பாண்டியரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இலங்கையின் பண்டைய வரலாற்றைக் கூறும் மகாவமிசம் என்னும் நூல் கி.மு.478இல் இலங்கையை ஆண்ட தமிழ் வேந்தனான விசயன், ஒரு பாண்டியன் மன்னன் மகளை மணந்ததாகக் கூறுகிறது. தமிழகத்தின் தென் பகுதியை ஆண்ட பாண்டியர்கள் மாற்றாரும் போற்றும் வண்ணம் ஆண்டனர்.

<u>வினாக்கள்:</u>

1. திருக்குறளுக்கு உரையெழுதியவர்

அ).பாண்டியன்

ஆ). பரிமேலழகர்

இ). விசயன்

ஈ). இளங்கோவடிகள்

2. ஆதி இதிகாசங்கள்

அ) சிலப்பதிகாரம், மணிமேகலை

ஆ). கம்பராமாயணம், மகாபாரதம்

இ).இராமாயணம், பாரதம்

ஈ). இராமாயணம், சிலப்பதிகாரம்

3. இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன்

அ). நெடுஞ்செழியன்

ஆ). கடுங்கோன்

இ). விசயன்

ஈ). பரிமேலழகன்

4. பாண்டியர்கள் சிறப்புற ஆண்டது தமிழகத்தின்

அ). தென்பகுதி

ஆ). வட பகுதி

இ). கிழக்குப் பகுதி

ஈ). மேற்குப் பகுதி

5. மன்னன் என்பதன் நேர்ப் பொருள் தரும் சொல்

அ). மைந்தன்

ஆ). களப்பிரர்

இ). பாண்டியன்

ஈ). வேந்தன்

## பகுதி - ஆ

1. நீ வசிக்கும் ஊரில் உயர்நிலைப் பள்ளி ஒன்றினை அமைத்துத் தருமாறு மாவட்ட ஆட்சியருக்குக் கடிதம் ஒன்று எழுதுக (6)

(அல்லது)

நீ கண்டு களித்த அறிவியல் கண்காட்சியைப் பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

★ [உமது முகவரி: செல்வன்/ செல்வி, 5. கம்பர் தெரு, அயோத்தி நகர், சென்னை – 20 எனக் கொள்க.]

2. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (6)

அ).முன்னுரை- மக்க்ள் தொகையும் சுற்றுச் சூழலும் - நிலம் மாசு படுதல் - நீர் மாசுபடுதல் - மாசுக் கட்டுப்பாடு வழி முறைகள் - முடிவுரை.

ஆ). நான் பிரதமரானால் - அரசியலுக்கு அணிகலன் - எதிர்க் கட்சிகளின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளுதல் - அனைவருக்கும் கல்வி - விவசாயம் மற்றும் பிற தொழில்களின் வளர்ச்சி - முடிவுரை.

இ). முன்னுரை - ஒற்றுமையின் சிறப்பு - இந்தியாவின் பெருமை - வேற்றுமையில் ஒற்றுமை - ஒருமைப்பாட்டைப் பேணும் வழிகள் - முடிவுரை.

3. உமது பகுதியில் நடைபெற்ற 'சுற்றுப் புறச் சூழல் விழிப்புணர்வு' முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக. (3)

(அல்லது)

உமது பள்ளியில் நடைபெற்ற சிறு சேமிப்பு முகாம் பற்றி அறிக்கை ஒன்று எழுதுக.

## பகுதி - இ

1. சான்று தருக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3)

i). பண்புப் பெயர் புணர்ச்சி

அ). மரவேர்

ஆ). கருவிழி

இ). வடகிழக்கு

ஈ). நிலங்கடந்தான்

ii). சொல் பின்வருநிலையணி

அ). ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்.

ஆ). சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

இ). உள்ள முடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

ஈ). பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தற்கு வேண்டும் பொழுது.

iii). தோன்றல் விகாரம்

அ). மரவேர்

ஆ). வாழைப்பழம்

இ). பொற்குடம்

ஈ). தென் கிழக்கு

iv). திசைப் பெயர் புணர்ச்சி

அ). சிற்றோடை

ஆ). பைங்கூழ்

இ). வட்டக்கல்

ஈ). வடமலை

v). இயல்புப் புணர்ச்சி

அ). மணியோசை

ஆ). மரக்கிளை

இ). புறங்கடை

ஈ). பொன்வளையல்

**2. நிரப்புக (எவையேனும் மூன்றை மட்டும்)** **(3)**

i). இரு சொற்கள் சேரும் போது எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகச் சேர்வது ----------

அ). தோன்றல் விகாரப் புணர்ச்சி

ஆ). இயல்புப் புணர்ச்சி

இ). கெடுதல் விகாரப் புணர்ச்சி

ஈ). திரிதல் விகாரப் புணர்ச்சி

ii). மருதம் என்பது ----------

அ). மலை, மலை சார்ந்த இடம்

ஆ). கடல், கடல் சார்ந்த இடம்

இ). வயல், வயல் சார்ந்த இடம்

ஈ). காடு, காடு சார்ந்த இடம்

iii). மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைக் கைப்பற்றுதல் ------

அ). வெட்சித் திணை

ஆ). வஞ்சித் திணை

இ). உழிஞைத் திணை

ஈ). பாடாண் திணை

iv). வெண்பாவுக்குரிய ஓசை ----------

அ). அகவலோசை

ஆ). துள்ளலோசை

இ). செப்பலோசை

ஈ). தூங்கலோசை

v). நெய்தல் திணைக்குரிய தெய்வம் ---------

அ). முருகன்

ஆ). திருமால்

இ). கொற்றவை

ஈ). வருணன்

**3. கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்றை மட்டும்) (3)**

i). பெரியன் (பிரித்தெழுதுக)

அ). பெரிய + அன்

ஆ). பெருமை + அன்

இ). பெரு + அன்

ஈ). மேற்கூறிய எதுவுமில்லை

ii). செம்மை + ஆம்பல் (சேர்த்தெழுதுக)

அ). செவ்வாம்பல்

ஆ). செதாம்பல்

இ). சேதாம்பல்

ஈ). செம்மையாம்பல்

iii). மர வேர் (சொல்லைப் பிரித்து எவ்வகைப் புணர்ச்சி என எழுதுக.)

அ). மர + வேர் - கெடுதல் புணர்ச்சி

ஆ). மரா + வேர் - திரிதல் புணர்ச்சி

இ). மரம் + வேர் - கெடுதல் புணர்ச்சி
ஈ). மரம் + வேர் - தோன்றல் புணர்ச்சி

iv). இல்லாரை (சொல்லைப் பிரித்து அசை, வாய்பாடு எழுதுக)
அ). நேர் நேர் நேர் - புளிமாங்காய்
ஆ). நேர் நேர் நேர் - தேமாங்காய்
இ). நேர் நேர் நேர் - கூவிளங்காய்
ஈ). நேர் நேர் நேர் - கருவிளங்காய்

v). பைந்தமிழ் (அளவுப் பண்புப் பெயர் புணர்ச்சியாக மாற்றுக)
அ). செந்தமிழ்
ஆ). முத்தமிழ்
இ). நற்றமிழ்
ஈ). இன்றமிழ்

4. இலக்கணக் குறிப்பு தருக. (மூன்றுக்கு மட்டும்) (3)

i).வட்டக்கல் என்பது
அ). மகர ஈற்றுப் புணர்ச்சி
ஆ). திசைப் பெயர் புணர்ச்சி
இ). பண்புப் பெயர் புணர்ச்சி
ஈ). மேற்கூறிய எதுவுமில்லை.

ii). தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்
அ). தற்குறிப்பேற்ற அணி
ஆ). இரட்டுற மொழிதல் அணி
இ). பின்வருநிலையணி
ஈ). வஞ்சப் புகழ்ச்சி அணி

iii). அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.
அ). இன்னிசை வெண்பா
ஆ). பஃறொடை வெண்பா
இ). குறள் வெண்பா
ஈ). நேரிசை வெண்பா

iv). மேல் நாடு

அ). மகர ஈற்றுப் புணர்ச்சி
ஆ). பண்புப் பெயர் புணர்ச்சி
இ). திசைப் பெயர் புணர்ச்சி
ஈ). மேற்கூறிய எதுவுமில்லை.

v). தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

அ).சொற் பொருள் பின்வருநிலையணி
ஆ). பொருள் பின்வருநிலையணி
இ). இரட்டுற மொழிதல் அணி
ஈ). பிறிது மொழிதல் அணி

**5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (மூன்று மட்டும்) (3)**

i) அ). இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

ஆ). இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது பிறிது மொழிதல் அணி.

இ). இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது வஞ்சப் புகழ்ச்சி அணி.

ஈ). இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது இரட்டுற மொழிதல் அணி.

ii). அ).வெண்பாவில் இயற்சீரும் வெண்சீரும் வரும்.
ஆ).வெண்பாவில் இயற்சீரும் வெண்சீரும் வாரா.
இ).வெண்பாவில் இயற்சீர் மட்டுமே வரும்.
ஈ).வெண்பாவில் வெண்சீர் மட்டுமே வரும்.

iii). அ). ஆநிரைகளை மீட்பது வஞ்சித் திணை.
ஆ). ஆநிரைகளை மீட்பது பொதுவியல் திணை.
இ). ஆநிரைகளை மீட்பது வாகைத் திணை.
ஈ). ஆநிரைகளை மீட்பது கரந்தைத் திணை.

iv). அ). முல்லைத் திணைக்குரிய சிறு பொழுது நண்பகல்.
ஆ). முல்லைத் திணைக்குரிய சிறு பொழுது மாலை.
இ). முல்லைத் திணைக்குரிய சிறு பொழுது ஏற்பாடு.
ஈ). முல்லைத் திணைக்குரிய சிறு பொழுது யாமம்.

v). அ). குறிஞ்சித் திணைக்குரிய பறவை நாரை, அன்னம்.
ஆ). குறிஞ்சித் திணைக்குரிய பறவை கிளி, மயில்.
இ). குறிஞ்சித் திணைக்குரிய பறவை புறா, பருந்து.
ஈ). குறிஞ்சித் திணைக்குரிய பறவை நாரை, நீர்க்கோழி.

## பிரிவு - ஈ

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

தமிழினம் தனக்குவமையில்லா ஒரு தனி இனம். தமிழர் நாகரிகம் தன்னிகரில்லா நனி நாகரிகம். தமிழர் உணவு, உடை, விருந்து, ஈகை, பொறை, நடுவு நிலைமை, அருள் ஆகிய பண்புகளால் சிறந்திருந்தனர்; உழவையும் தொழிலையும் மதித்திருந்தனர்; வினையை ஆடவர் உயிராகக் கருதினர்; சான்றோன் ஆதலே கல்வியின் முடிவெனப் போற்றினர்; விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர்; புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர்; பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர்; ஈந்து உவந்து இன்பம் கண்டனர்.

<u>**வினாக்கள்:**</u>

1. `சான்றோன் ஆகுதல் என்பது
   அ). வீரத்தின் மாண்பு
   ஆ). வெற்றியின் களிப்பு
   இ). கல்வியின் முடிவு
   ஈ). கொடையின் சிறப்பு

2. பழந் தமிழர்கள் உயிரையும் கொடுக்க முனைந்தது
   அ). புகழோடு மறைய
   ஆ). பழி பாவம் அஞ்சி
   இ). பொருள் வாழ்வை எண்ணி
   ஈ). அருள் வாழ்வை வேண்டி

3. பழந்தமிழர்கள் கொண்டிருந்த சிறந்த பண்புகள்

அ). நகை, அழுகை, வீரம், பெருமிதம்

ஆ). காதல், வீரம், கொடை, மடமை

இ). அருள், மருள், தானம், தவம்

ஈ). விருந்து, பொறையுடைமை, நடுவு நிலைமை, ஈகை

4. பழந் தமிழர்கள் விரும்பி இன்பம் கண்டது

அ). கள் அருந்தி

ஆ). புலால் உண்டு

இ). ஈந்து உதவி

ஈ). கூடித் தழுவி

5. பழந்தமிழர்கள் மதித்தவை

அ). பொன், பொருள்கள்

ஆ). உழவு, தொழில்கள்

இ). மனைவி, மக்கள்

ஈ). ஆடு, மாடுகள்

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூரில் இராமலிங்கர் பிறந்தார்; தருமமிகு சென்னையிலுள்ள கந்தக் கோட்டத்து இறைவனாம் முருகனைப் பற்றி மனமுருகப் பாடிய நூல் தெய்வ மணி மாலை. திருவொற்றியூர்ச் சிவபெருமான் மீது பாடிய நூல் எழுத்தறியும் பெருமான் மாலை. வள்ளலார், 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பயிர் வாடத் தாம் வாடினார். பசிப்பிணியால் உயிர் இளைத்தோரைக் கண்டு வருந்தினார். வடலூரில் சத்திய தருமச் சாலையை நிறுவிச் சாதி, மத வேறுபாடு இன்றிப் பசித்தோர்க்கு உணவிட்டார். இவர் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார். அதற்காகவே வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார்.

**வினாக்கள்:**

1. வள்ளலார் பிறந்த ஊர்

அ). மருதூர்

ஆ). கடலூர்

இ). சிதம்பரம்

ஈ). மதுரை

2.கந்தக் கோட்டத்து இறைவன்

அ). முருகன்

ஆ). திருமால்

இ). சிவன்

ஈ). அல்லா

3. சாதி மத வேறுபாடின்றி பசித்தோர்க்கெல்லாம் உணவளித்த சாலை

அ). தர்ம சத்திரம்

ஆ). அன்னச் சாவடி

இ). சத்திய தருமச் சாலை

ஈ). தருமச் சாலை

4. இராமலிங்கரின் வழிபாட்டு முறை

அ). உருவ வழிபாடு

ஆ). ஒலி வழிபாடு

இ). அருவ வழிபாடு

ஈ). சோதி வழிபாடு

5.வடலூரில் நிறுவப் பட்ட சபை

அ). சன்மார்க்கசபை

ஆ). சத்திய ஞான சபை

இ). சத்திய தருமச் சாலை

ஈ). தருமச் சாலை

**3. கீழ்க்காணும் பாடல் அடிகளைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக. (4)**

'பண்பெனப் படுவது பாடு அறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை'

**வினாக்கள்:**

1.சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்

அ). அன்பு

ஆ). பண்பு

இ). அறிவு

ஈ). செறிவு

2. பேதையார் என்பதன் பொருள்

அ). அறிவுடையார்

ஆ). அன்புடையார்

இ). அறிவிலார்

ஈ). பண்பிலார்

3. நெருக்கம் எனப்படுவது

அ). சுயநலத்தோடு ஒழுகுதல்

ஆ). பண்பற்ற செயல்களைச் செய்தல்

இ). அறியாமையோடு இருத்தல்

ஈ). கொடுத்த வாக்கைக் காப்பாற்றுதல்

4. சுற்றம் தழுவி வாழ்தலே

அ). செறிவு

ஆ). அன்பு

இ). அறிவு

ஈ). பண்பு

**4. விடையளிக்க. (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்) (5)**

அ).தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதை விளக்குக.

ஆ).காந்தியடிகள் பின்பற்றிய கொள்கைகளைத் தொகுத்து எழுதுக.

இ). தொழிற் கல்வி, தொழில் நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.

**5. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (5)**

அ). புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

ஆ). பொருளினது சிறப்பு. பொருளீட்டும் நெறி, பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**6. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (2)**

அ).ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

ஆ).வள்ளலாரின் முழக்கம் யாது?

**7. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (6)**

அ). 'குறட்டை ஒலி ' கதையின் கருத்தும் பொருளும் மாறாமல்சுருக்கி எழுதுக.

ஆ). அயோத்தி தாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு குறித்துக் கட்டுரை ஒன்று எழுதுக.

**8. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (3)**

அ). தொல்லியல் துறை பற்றி எழுதுக.

ஆ). இலிண்ட்கிரென் பண்பு நலன்களை எழுதுக.